[2002 மே 2

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அரசானது பொறுப்பேற்ற உடனேயே சென்ற ஆண்டு மட்டும், இதுவரை எந்த ஓர் அரசும் செய்யாத அளவிற்கு 125 உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தி ஆணை பிறப்பித்து இந்த ஆண்டும் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றோம். அதற்குரிய நிதியையும் மாண்புமிகு நிதியமைச்சரிடம் கேட்டு இருக்கின்றோம். அவர் அந்த நிதியைத் தந்த உடனேயே, மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும். காரணம், அவர் சொன்னதுபோல அது பெண்கள் பள்ளியாகும். பெண்களுக்கு நல்ல கல்வி தருவதுதான் இந்த அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. ஆகவே இதுபற்றிச் சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 262, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

262—

சித்த மருத்துவர்கள்

***3980—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியிலுள்ள அரசு மருத்துவமனைகளில் சித்த மருத்துவர்களை விரைவில் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டத்தில், குளத்தூர் தொகுதியிலுள்ள அரசு மருத்துவமனைகளில் இயங்கிவரும் சித்த மருத்துவப் பிரிவுகளில் சித்த உதவி மருத்துவர்களின் பணியிடங்கள் நிரப்பப்பட்டு தற்போது முழுமையாக பணிபுரிந்து வருகிறார்கள். காலியிடம் எதுவும் தற்போது இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2002 மே 2]

முற்பகல் 10-05

டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு சி.டி.ஸ்கேன் வழங்கி, புதுக்கோட்டை மாவட்ட மக்கள் நலன் காத்துவரும் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்கள் சார்பாகவும், குளத்தூர் தொகுதி மக்கள் சார்பாகவும் என் பணிவான நன்றியினை அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்குகின்றேன். சித்த மருத்துவர்களை நியமனம் செய்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்து, குளத்தூர் தொகுதியில் உள்ள கீரனூர், இலுப்பூர் ஆகிய மருத்துவமனைகள் தாலுகா மருத்துவமனைகளாக இருப்பதால், அவற்றில் சித்த மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டதைப்போல ஓமியோபதி மருத்துவர்களும் நியமனம் செய்யப்படுவார்களா எனவும் அறிய விரும்புகிறேன். மேலும், கீரனூர் பொது மருத்துவமனையில் காலியாக உள்ள 2 மருத்துவர்கள் பணியிடங்களுக்கு மருத்துவர்கள் விரைவில் நியமனம் செய்யப்படுவார்களா எனவும், கீரனூர் பொது மருத்துவமனையில் ஸ்கேன் வசதி இருந்தும் அதைச் செயல்படுத்துவதற்கு ஆள் இல்லாமல் அது பயனற்று உள்ளது; எனவே அதைச் செயல்படுத்துபவர், காலியாக உள்ள செவிலியர், துப்புரவாளர் ஆகிய பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படுமா என்பதையும் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரனூர் அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே சித்த வைத்தியப் பிரிவு செயல்பட்டு வருகிறது. எனவே அங்கே ஓமியோபதி பிரிவு தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. காரணம், ஒவ்வொரு பகுதி மக்களும் ஒவ்வொரு வகையான சிகிச்சை முறையை விரும்புகிறார்கள். அந்த அடிப்படையில்தான் கீரனூர் பகுதி மக்கள் மத்தியிலே சித்த மருத்துவ முறை சிகிச்சைக்கு வரவேற்பு இருந்த காரணத்தாலே, அங்கே சித்த வைத்தியப் பிரிவு தொடங்கப்பட்டிருக்கிறது. மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, கீரனூர் அரசினர் மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்கள் மற்றும் செவிலியர் பணியிடங்கள் விரைவிலே நிரப்பப்படுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.